# எங்கள் பரலோக பிதா!

எப்படியாக நாம் ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே நமக்கு கற்றுக் கொடுத்திருக்கின்றார். கர்த்தர் கற்பித்த ஜெபமானது, நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையை குறித் தது மட்டுமல்ல, இந்த பூவுல வாழ்க்கைக்கு தேவையானவைகள் குறித் ததாகவும் இருக்கின்றது. அந்த ஜெபத்தை, கர்த்தர் கற்பித்தபடியே, வார் த்தைக்குவார்த்தை அதே ஜெப த்தை ஏறெடுப்பவர்கள், தேவ னுக்கு ஏற்புடையதாக காணப் படும்படிக்கு, அந்த வார்த்தை களின் கருப்பொருளை உணர் ந்தவர்களாக, ஆவியோடும் உண்மையோடும் அந்த ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். கர்த்தர் கற் பித்துக் கொடுத்த ஜெபத்தின் கருபொருளானது, நாம் ஜெபிக்கும் போது என்ன மனநிலையோடு தேவ சமுகத்திற்கு செல்ல வேண்டும் என்பதைக் குறித்து நமக்கு வெளிப்படுத்துகின்றது. இந்த ஜெபத்தைக் குறித்து சற்று தரித்திருந்து இந்நாட்களிலே நாம் தியானம் செய்வோம். கர்த்தர் கற்பித்துக் கொடுத்த ஜெபத்தலே ஏழு (7) அம்சங்களை நாம் காணலாம். 1. பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே, 2. உம் முடைய ராஜ்யம் வருவதாக, 3. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. 4. எங்களு க்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும். 5. எங்கள் கட னாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்க ளுக்கு மன்னியும். 6. எங்களை சோதனைக்குட்படபண்ணாமல், தீமையி னின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், 7. ராஜ்யமும், வல்லமையும், மகிமையையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென் என்ப வைகளே. இவற்றுள் முதல் மூன்று வசனங்களும், தேவனாகிய கர்த் தரையும் அவருடைய ராஜ்யத்தையும் குறித்த வசனங்களாயிருக்கின் றது. அடுத்த மூன்று வசனங்களும் எங்கள் தேவைகளை குறித்த வசன ங்களாயிருப்பதை காணலாம். கடைசி வசனம், தேவனாகிய கர்த்தர் ஒரு வரே ஆராதனைக்குரியவர் என்பதை எடுத்து கூறுகின்றது. மேலே கூறப் பட்ட ஒழுங்கு வரிசையின்படி ஜெபம் செய்யாவிட்டால் தேவன் அதை கேட்க மாட்டார் என்பது பொருளல்ல. மாறாக தேவன், தேவ ராஜ்யம், தேவ சித்தம் மூன்றும் நித்தியமானவைகள் அவைகள் நம்முடைய வாழ் விலே எப்போதும் முதன்மைபடுத்தப்பட வேண்டியவைகள். பின்பு நம்மு டைய அன்றாட தேவைகளை தெரியப்படுத்தி, அவரே அவைகளை செய்து முடிக்க வல்லவர் என்றும், யாவும் அவருடைய கட்டுப்பாட்டி ற்குள் இருக்கின்றது என்பதையும் நாம் அறிக்கை செய்ய வேண்டும்.

**மத்தேயு 6:9**

நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது:

**ஜெபம்:** பரலோகத்திலிருக்கின்ற எங்கள் பிதாவாகிய தேவனே, ஜெபத்தின் வழியாக, நான் அனுதினமும் உம்மோடு உறவாடும்படி நீர் எனக்கு கொடு த்த இந்த பெரிதான சிலாக்கியத்திற்காக உமக்கு நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தம் பிள்ளைகளுக்கு இரங்குகின்றவர்…

**சங்கீதம் 103:13**

தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.

இந்த உலகிலே வாழும்வரைக்கும் நமக்கு தேவைகள் இருக்கும். அனுதினமும் பலவேறுபட்ட சூழ்நிலைகளுக்குள் தள்ளப்பட்டு, பல சவால்களை எதிர்நோக்க நேரிடலாம். சில வேளைகளிலே, நாம் போகும் பாதைகள், தனித்துச் செல்லும் வழிகளாகவும், மிகவும் கடினமானதாகவும் தோன்றலாம். பிரச்சனைகள் ஒன்றின்பின் ஒன்றாக அலையலையாக நம் வாழ்க்கைப் படகில் மோதலாம். நடுக்கடலில் செல்லும் படவை, கார்மேகங்கள் சூழ்ந்து, இடி மின்னலோடு வரும் புயலைப் போல, பயங்கரங்கள் தீடீரென எழுந்துவரலாம். துன்பங்கள் மாத்திரமல்ல, இன்பமான வேளைகளும் நம் வாழ்க்கையிலே வருவதுண்டு. உயர்வோ, தாழ்வோ, இன்பமோ, துன்பமே, மலைகளோ, பள்ளத்தாக்குகளோ இவை யாவற்றின் மத்தியிலும், பரலோகத்திலே இருக்கின்ற சர்வ வல்லமையுள்ள, நிகரற்ற தேவனாகிய கர்த்தரை நோக்கி: என்னுடைய அப்பா பிதாவே என்று கூப்பிடும் பாக்கியத்தை நாம் யாவரும் பெற்றிருக்கின்றோம். எப்படிப்பட்ட சூழ்நிலைகளின் மத்தியிலும், "பரலோகத்திலிருக்கின்ற என்னுடைய அப்பா பிதாவே" என்ற ஒரே வசனத்திலேயே நாம் ஆறுதலை கண்டடைகின்றோம். ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகின்றதுபோல, கர்த்தர் தமக்கு பயந்தவர்களுக்கு இரங்குகிறார். (சங்கீதம் 103:13). ஒரு மனிதன் தன் பிள்ளைச் சுமந்துகொண்டு போவதுபோல, தேவனாகிய கர்த்தர்தாமே தம்முடைய ஜனங்களை சுமக்கின்றவராக இருக்கின்றார். (உபாகமம் 1:31). உங்கள் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங் கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்கு பதிலாக பாம்பைக் கொடுப்பனா? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையான ஈவுகளை அளிப்பது அதிக நிச்சயமல்லவா என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்கள் ஜெபிக்கும் போது, அப்பா பிதாவே என்று சர்வ வல்லமையுள்ள தேவனை நோக்கி கூப்பிடும் மேன்மைய உணர்ந்தவர்களாக, தேவனை நோக்கி கூப்பிடுங்கள். ஒரு தந்தை தன் பிள்ளைக்கு இரங்காதிருப்பாரோ? அவர் உண்மையுள்ள மனதோடு தம்மை நோக்கி பார்க்கின்ற யாவருடைய வேண்டுதல்களுக்கும் பதில் கொடுக்கின்றவராக இருக்கின்றார்.

**ஜெபம்**: உண்மையாய் கூப்பிடுகின்றவர்களின் ஜெபத்தை கேட்கின்ற தேவனே, நீர் என்னுடைய பரம பிதா என்பதின் கருப்பொருளை உணர்ந்து, அன்போடும் விசுவாசத்தோடும் உம்மண்டை வர உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரம பிதா பாராட்டின அன்பு!

**1 யோவான் 3:1**

பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்

*கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்கு தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கின்றார் என்றார். மீதியானருக்கு பயந்ததால், கோதுமையை அவர்களின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்கு சமீபமாய் அதை போரடித்துக் கொண்டிருந்து கிதியோன், கர்த்தருடைய தூதனை நோக்கி: ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்கள் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக் கொடுத்தாரே என்றான். (நியா 6:12-13).* இப்படிப்பட்ட சத்தங்கள் அன்றும், இன்றும் தேவ ஜனங்களுடைய வாயிலிருந்து வெளிப்படுவதை ஆங்காங்கே கேட்கலாம். கிறிஸ்தவ தேசம் என்று கருதப்பட்ட ஒரு தேசத்திலே, சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர், சில மனிதர்களால், பாரிய ஆபத்து இழைக்கப்பட்டது. அதனால், ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தார்கள். துன்பமும், அவமானமும், நிந்தையும் ஏற்பட்டது. அப்பொழுது அந்த தேசத்திலே வாழ்ந்தவர்களில் சிலர், தேவன் எங்கே? அவர் இருக்கின்றாரா? என்று கேட்டார்கள். தேசத்தின் மட்டத்தில் மாத்திரமல்ல, சமூக மட்டங்களிலும், குடும்பங்களிலும், தனி மனிதர்கள் மத்தியிலும் இத்தகைய சத்தங்கள் ஒலிக்கின்றது. விசுவாசிகளுக்கு ஏற்படும் உபத்திரவங்கள் மத்தியிலே, தேவனை விரோதிக்கின்றவர்களும், அவிசுவாசிகளும், உங்கள் தேவன் எங்கே என்று கேட்கும் போது, விசுவாசிகளின் தேவபக்தியும், காத்திருப்பும் சோதனைக்குட்படுத்தப்படுகின்றது. அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கே என்று புற ஜாதிகள் சொல்வானேன்? நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்: தமக்கு சித்தமானவைகள் யாவையும் செய்கின்றார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவர் இருந்தவரும், இருக்கின்றவரும், இனிமேலும் வருகின்றவருமாயிருக்கின்றார். அவர் பட்சபாதம் அற்றவர். அவரிடத்தில் எந்த வேற்றுமையின் நிழலுமில்லை. அவர் ஒருவரே நீதியுள்ள நியாயாதிபதி. ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனையடைய வேண்டும் என்பதற்காக தன் ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகிற்கு அனுப்பி, தம்முடைய திவ்விய அன்பை வெளிப்படுத்தினார். இவரே நாம் ஆராதிக்கும் பரமண்டலத்திலே இருக்கின்ற எங்கள் பிதா!

**ஜெபம்:** உன்னதத்திலே வாழ்ந்தாலும், தாழ்மையுள்ளவர்களை நோக்கிப் பார்க்கின்ற தேவனே, அளவிடமுடியாத உம்முடைய திவ்விய அன்பிற்காக ஸ்தோத்திரம். எந்த சூழ்நிலையிலும் நான் உம்மில் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நல்வழிப்படுத்தும் நம் பரலோக தந்தை

“அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். . நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவி யுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரரு மாமே. தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே. கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்ப டும்படிக்கு அவருடனேகூடப் பாடுப ட்டால் அப்படியாகும். ஆதலால் இக் காலத்துப் பாடுகள் இனி நம்மிடத் தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பி டத்தக்கவைகள் அல்லவென்று எண் ணுகிறேன்.” என்று பரிசுத்த வேதா கமத்திலே வாசிக்கின்றோம். எனவே நமக்கு உண்டாகும் பாடுகள், உப த்திரவங்கள் மத்தியிலே தளர்ந்து போகாமல் அவரையே உறுதியாய் பற்றிக் கொள்ள வேண்டும். இந்த உலகத்திலே உள்ள நல்ல தகப்பன் மார் தங்கள் பிள்ளைகளுக்கு உச்சிதமானவைகளை கொடுக்கும்படி அதிகமாய் பிரயாசப்படுகின்றார்கள். ஒரு தகப்பனானவன் ஊரிலுள்ள அயலவர்களுடைய பிள்ளைகள் தவறு செய்யும் போது, ஒருவேளை அவர்களுக்கு புத்திமதிகளையும் ஆலோசனைகயும் வழங்க முயற்சி செய்வார்கள். அவர்கள் தண்டித்து, கண்டிக்க அந்த தகப்பனானவனு க்கு அதிகாரமில்லை. ஏனெனில் அயலிலுள்ளவர்கள் அவனுடைய சொந் தப் பிள்ளைகள் அல்ல. ஆனால், தன்னுடைய மகனானவன், தவறு செய்யும் போது, அவனை கண்டிக்க வேண்டிய இடத்திலே கண்டித்து, தண்டிக்கப்பட வேண்டிய இடத்திலே அவனை தண்டிக்கின்றார். அது போலவே, நாம் நன்மைகளின் ஊற்றாகிய பரம பிதாவுக்கு பிள்ளை களாக இருப்பதால், அவர் தம்முடையவர்களை சிட்சித்து நடத்துகின் றார். அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக் கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்த க்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவே ண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ் சக்காலம் சிட்சித்தார்கள் இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எனவே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே.

**எபிரெயர் 12:7**

**நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?**

**ஜெபம்**: அன்புகூர்ந்து தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கின்ற என் பரலோக பிதாவே, உம்முடைய சிட்சையை அற்பமாய் எண்ணாமலிருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நம்பிக்கையோடு சேருங்கள்

பெரியவர்கள், தலைவர்கள், பிரதானிகள், அதிகாரங்களிலுள்ளவர்களுக்கு கடிதங்கள் எழுதும் போது அல்லது மேடையிலே அவர்களை குறித்து உரையாற்ற செல்லும் போது, கடிதங்களையும், உரைகளையும் ஆரம்பிப்பதற்கு ஒரு ஒழுங்கு முறையுண்டு. அத்தகையவர்களை அழைப்பதற்கு, கனம் பொருந்திய, மதிப்புக்குரிய, வணக்கத்திற்குரிய போன்ற பற்பல வார்த்தைகளை உபயோகிக்கின்றார்கள். அந்த வார்த்தைகளால் பெரியவர்கள், தலைவர்கள், பிரதானிகள், அதிகாரிகள் மக்கள் முன்னிலையிலே கனமடைகின்றார்கள். அத்தகைய கனத்தை செலுத்த தவறுகின்றவர்களுக்கு அசௌகரியமான பின்விளைவுகள் ஏற்படலாம். எனவே, விரும்பியோ விரும்பாமலோ, மக்கள் மதிப்புக் குரிய வார்த்தைகளை கூறி பெரியோரை அறிமுகப்படுத்துகின்றார்கள். நாமோ அவ்விதமான மனநிலையோடு சர்வ வல்லமையுள்ள தேவன் அண்டையிலே சேருகின்றவர்கள் அல்ல. பரலோகத்திலே இருக்கின்ற பிதாவே என்று பயபக்தியோடு கூறும் போது, நாம் பிதாவாகிய தேவனை கனப்படுத்துகின்றோம். கனப்படுத்தும் அந்த வார்த்தைகள் வெறும் வார்த்தைகள் அல்ல. அந்த வார்த்தைகளிலே ஒரு நம்பிக்கை உண்டு. ஆறுதல் உண்டு. தைரியம் உண்டு. தன் வீட்டிற்கு அருகில், தெருவோரமாக தன் நண்பர்களோடு சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்த சிறு பிள்ளையானது, தனக்கு ஆபத்து ஏற்படப்போகின்து என்று உணரும் போது, எப்படியாக, வேறு எந்த சிந்தனைகளுமின்று, முழு நம்பிக்கையோடு, ஓடிச்சென்று, தன் தந்தையின் அண்டை சேர்ந்து கொள்கின்றானோ, அவ்வண்ணமாகவே நாமும் உன்னதமானவரின் உயர்மறைவிலே சேர்ந்து கொள்ள முடியும். எனவே, நம்முடைய பிதாவாகிய தேவன் இருக்கும் இடத்தை கருத்தற்ற முறையிலே வெறும் வார்த்தைகளாக கூறிக் கொள்ளாமல், கருத்தோடு அவர் அண்டையிலே சேர்ந்து கொள்ள வேண்டும். நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடை க்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன். அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார் அவர் செட் டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய் அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும் என்று தேவ பக்தன் கூறியது போல நாமும், மனத் தாழ்மையோடும், முழு நம்பிக்கையோடு பரலோக தேவன் அண்டையிலே தைரியத்தோடு சேர்ந்து கொள்வோம்..

**சங்கீதம் 138:6**

**கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்;**

**ஜெபம்:** நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளுகின்ற தேவனே, ஆபத்தில் நாளிலே நீர் என்னோடிருந்து, என்னனத் தப்புவித்து, நடத்துவதற்காக உம்மை நன்றியுள்ள இருதத்தோடு ஸ்தோத்தரிக்கின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரலோகத்திலே வீற்றிருக்கின்றவர்!

ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான். (யூதா *1:14-15*) ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விரு தாக்காரியத்தைச் சிந்திப்பானேன்? கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி: அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள். இவர்கள் தேவன் யார் என்று அறியாமலும், அவருடைய மத்துவத்தையும், பரிசுத்தத்தையும் உணராதபடிக்கு தங்கள் மனதை கடினப்கடுத்திக் கொண்டு, அவருடைய நீடிய பொறுமைய அசட்டை செய்கின்றார்கள். அவர் கொடுத்திருந்கும் திறந்த அதி சிறந்த பரலோக அழைப்பிதலின் மேன்மையை அறியாமல், தங்கள் மனம் போன போக்கி வாழும்படிக்கு, தங்கள் துன்மார்க்கமான வழிகளிலே நின்று கொண்டு, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ஏற்படுத்தின மெய்யான ஒரே வழியை பரியாசம் செய்கின்றார்கள். என்னுடைய தகப்பனார், அவருடைய தகப்பனார், அவர்களுடைய முன்னோர்கள் எல்லாரும், இன்பமாய் வாழ்ந்து, கடந்து போனார்கள். நானும் அவ்வழியே போவேன், காரியங்கள் அன்றிருந்தது போலேவே இன்னும் இருக்கின்றது என்று கூறி தேவத்துத்தையும், அவருடைய இரட்சிபின் செய்தியையும் நகைக்கின்றார்கள். பரலோகத்திலே வீற்றிருக்கின்றவர் இதை அறியாரோ? உன்னதமானவருக்கு இவைகள் மறைவாயிற்றோ? இல்லை. பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார் ஆண்டவர் அவர்களை இகழுவார். முலைகளே, எங்கள் மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக்கொள்ளுங்களென்றும் சொல்லும் இவர்கள் மேல் வரும். அந்த நாள்வரும் முன் பரலோகத்திருக்கின்றவரின் அழைப்பை ஏற்று அவர் ஏற்படுத்திய ஒரே வழியில் நடக்கின்றவன் பாக்கியவானாக இருப்பான்.

**சங்கீதம் 2:11**

**பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள்.**

**ஜெபம்**: மகத்துவமும் பரிசுத்தமுமுள்ள பரலோக தேவனே, நான் இப்படிப்பட்ட தேவனை அப்பா பிதாவே என்று அழைக்கதக்கதாய் பெற்றிருக்கும் பாக்கியத்தை உணர்ந்து கொள்ளும் இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# புதிய மார்க்கத்தின் வழியாக...

அக்காலத்திலே,இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் முதலாம் நாளிலே, சீனாய் வனாந்தரத்தில் சேர்ந் தார்கள். மோசே தேவனிடத்திற்கு ஏறிப்போனான். கர்த்தர் மலையி லிருந்து அவனைக் கூப்பிட்டு அவனோடு பேசினார். கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஜனங்களிடத்தில் போய், இன்றைக்கும் நாளைக்கும் அவர்க ளைப் பரிசுத்தப்படுத்து. அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள். மூன்றாம் நாளில் கர்த்தர் சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகச் சீனாய்மலையின்மேல் இறங்குவார். ஜனங்களுக்குச் சுற் றிலும் நீ ஒரு எல்லை குறித்து, அவர்கள் மலையில் ஏறாதபடிக் கும், அதின் அடிவாரத்தைத் தொ டாதபடிக்கும் எச்சரிக்கையாய் இருங்கள் என்று அவர்களுக்குச் சொல். மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாகவே கொல்லப் படுவான். ஒரு கையும் அதைத் தொடலாகாது. தொட்டால், நிச்சயமாகக் கல்லெறியுண்டு, அல்லது ஊடு ருவ எய்யுண்டு சாகவேண்டும் மிருகமானாலும்சரி, மனிதனானாலும்சரி, உயிரோடே வைக்கப்படலாகாது. எக்காளம் நெடுந்தொனியாய்த் தொனி க்கையில், அவர்கள் மலையின் அடிவாரத்தில் வரக்கடவர்கள் என்றார். மோசே மலையிலிருந்து இறங்கி, ஜனங்களிடத்தில் வந்து, அவர்களைப் பரிசுத்தப்படுத்தினான் அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்தா ர்கள். மூன்றாம் நாளுக்குகென்று எல்லா விதத்திலும் ஆயத்தப்பட் டார்கள். மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும் மின்னல் களும், மலையின் மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயிற்று. பாளயத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள். *(யாத் 19:1-16).* இப்படிப்பட்டவரே பரமண்டலங்களிலே வீற்றிருக்கின்ற நம்முடைய பிதாவாகிய தேவன். அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்க ராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவா மையுள்ள வரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷ ரில் ஒரு வரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர். அவ ருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென். இத்தகைய சர்வ வல்லமையுள்ள தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில் பிர வேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்ச மாகிய திரையின் வழியா ய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அவரிடம் சேரத்தக்கதான பெரிதான பாக்கியத்தை பெற்ற சந்ததியாக இருக்கின்றோம்.

**எபிரெயர் 10:20**

**அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,**

**ஜெபம்:** பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, நான் துர்மனச் சாட்சியற்ற உண்மையுள்ள இருதயத்தோடும், சுத்த ஜலத்தால் கழுவப் பட்ட சரீரத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் உம்மிடத்தில் சேர கிருபை செய்வீராக. இர ட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன்

# இயேசுவின் நாமத்திலே ஜெபிக்கின்றோம்

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயி ருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால், நான் உங்க ளுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத் தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங் களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்.தோமா அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற இட த்தைஅறியோமே, வழியை நாங் கள் எப்படி அறிவோம் என்றான். அதற்கு இயேசு: நானே வழியும் சத் தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதா வினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறி ந்திருப்பீர்கள் இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார். பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண் டான் அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப் படி சொல்லுகிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங் களை என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார். நான் பிதாவி லும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள். அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும் படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கே ட்டாலும் அதை நான் செய்வேன். ஆம் பிரியமான சகோதர சகோத ரிகளே, பரலோகத்திற்கு பகைஞராக இருந்த நம்மை, ஆண்டவராகிய இயேசு வழியாக தம்மோடு ஒப்புரவாக்கினார். ஆதலால், நாம் மீட்பராகிய இயேசுவின் நாமத்திலே, பரலோக தந்தையை நோக்கி ஜெபிக்கும் தகுதியை பெற்றிருக்கின்றோம்.

**யோவான் 16:23**

**நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொ ள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.**

**ஜெபம்**: ஒன்றுக்கும் அருகதையற்றவனாக இருந்த என்னை உம்முடைய பிள்ளையாகும்படிக்கு தகுதிப்படுத்தின தேவனே, உம்மை நோக்கி பார்க்க எனக்கு கிடைத்த விபரிக்க முடியாத இந்த பெரிதான சிலாக்கியத்திற்காக நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரசன்னத்தில் மனநிறைவு

தீர்க்கதரிசியாகிய ஏசாயா, உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டார். அந்த தரிசனத்திலே: சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரின் வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்: அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன: அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து: ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும்அவருடையமகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். (ஏசாயா 6:1-3).

**ஏசாயா 6:3**

**சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர்இ பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது**

அதற்கொத்ததாக, ஆண்டவராகிய இயேசுவின் சீஷனாகிய யோவான், தேவ வசனத்தினிமித்தமும், இயேசு கிறிஸ்துவைபற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவிலே கைதியாக விடப்பட்டிருந்த போது,கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளாகி தேவ தரிசனங்களை கண்டார். அவருடைய தரிசனத்திலே, பரலோகத்திலே இருக்கும் நான்கு ஜீவன்களும், இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இதை வெளிப்படுத்தல் நாலாம் (4) அதிகாரத்திலே வாசிக்கலாம். இந்த உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கும் தேவனுடைய பரிசுத்தவான்களும், தேவாதி தேவனை பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று தங்கள் துதிகளை தூபமாய் நறுமணமாய் ஏறெடுக்கின்றார்கள். அவர்கள் யாவரோடும், ஆவியிலே இணைந்து நாமும், பரலோகத்திலே வீற்றிருக்கின்ற சர்வ வல்லமையுள்ள எங்கள் பிதாவாகிய தேவனை, பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று துதிப்போமாக. அப்படியாக நாம் கருத்தோடு அறிக்கையிடும் போது, தேவாதி தேவனுடைய மகத்துவம் நிறைந்த நாமத்தை மேன்மைப்படுத்தி, அவருடைய பிரசன்னத்திலே களிகூரும் பாக்கியத்தை பெற்றுக் கொள்கின்றோம். குறைவற்ற அந்த பரிசுத்தமானது, நம் வாயின் வார்த்தையினால் உண்டானது அல்ல. அந்த சம்பூரணமான பரிசுத்தம் பரலோக பிதாவின் தொடக்கமும் முடிவுமற்ற தன்மையாக இருக்கின்றது. அந்த சத்தியத்தை நம் வாயினால் அறிக்கையிடுவது நமக்கு கிடைத்த மகா பெரிதான சிலாக்கியமாக இருக்கின்றது.

**ஜெபம்**: நேற்றும் இன்றும் என்றும் மாறாத பரிசுத்தமுள்ள தேவனே, உம்முடைய நிகரற்ற நாமத்தின் மகத்துவத்தை அறிக்கையிடும் பெரிதான மேன்மையை எனக்கு தந்ததிற்காக உமக்கு நன்றி செலுத்துகின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என் ஆத்துமா திருப்தியடையும்

மகா பராகிரமமுள்ள ராஜாவொருவன் ஒரு தேசத்தை நல்ஆளுகை செய்து வந்தான். ஒருநாள் அந்த ராஜாவானவன், ஒரு ஊருக்கு சென்ற வேளையிலே, தெருவோரமாக நின்ற அந்த ஊரின் குடிமக்கள், ராஜாவே நீர் வாழ்க என்று வாழ்த்தினார்கள். ஜனக்கூட்டத்தில் நின்ற குடியானவனொருவனின் சின்ன மகனாவன், தன் தகப்பனை நோக்கி: அப்பா, மகா பராக்கிரமம் நிறைந்த ராஜாவானர், நன்றாகவே வாழ்ந்து வருகின்றார் அப்படியானல் நாங்கள் ஏன் ராஜாவை வாழ்த்த வேண்டும் என்று கேட்டேன். அதற்கு தகப்பனானவர: மகனே, நாங்கள் வாழ்த்தினாலும், வாழ்த்தாவிட்டாலும், நீ சொன்ன பிரகாரமாக ராஜா சுகத்தோடு வாழ்ந்து நல் ஆட்சி செய்கின்றார். ஆனால், நாங்கள் அவரை வாழ்த்தும் போது, அவர் எங்களு டைய ராஜா என்றும், அவருடைய நல்லஆளுகையை ஏற்றுக் கொண்டு, அந்த ஆளுகை எங்கள் வாழ்வில் அறிக்கை செய்கின்றோம். அவருடைய நல் ஆளுகையினால் எங்களுக்கு சமாதானமதா வாழ்வு உண்டாயிருயிருக்கின்றது என்று கூறினார். கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தினாலே, பாவமறக் கழுவப்பட்டு, பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, இந்த உலகத்தின் பராக்கிரமமும் ஆளுகையும் காலத்தாலும், பெலத்திலும் மட்டுபபடுத்தப்பட்டவைகள். அவைகளுக்கு ஒரு தொடக்கமும் முடிவும் உண்டு. ஆனால், பரமண்டலத்திலே வீற்றிருக்கின்ற நம்முடைய பிதாவாகிய தேவனுடைய ஆளுகை காலத்தைக் கடந்தது. அவர் இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர். அவருடைய சர்வவல்லமை நேற்றும் இன்னும் என்றும் மாறாதது. அவருடைய பரிசுத்தம் அவருடைய சுபாவம். அவருடைய பரிசுத்தத்திற்கு முன் தீமை நிலை நிற்பதில்லை. மனிதர்கள் அவருடைய நாமத்தை பரிசுத்தம் என்று வாழ் த்தினாலும், வாழ்த்தாமல் விட்டாலும், அவருடைய பரிசுத்தம் ஒரு போதும் மாறிப்போவதில்லை. நிகரற்ற தேவன் குறைவுபடுவதுமி ல்லை. ஆனால், நாம் அவருடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று வாழ்த்தும் போது, அவருடைய சர்வ வல்லமை நிறைந்த அவரையும், அவருடைய பரிசுத்த ஆளுகையை நாம் நம்முடைய வாழ்க்கையிலே ஏற்றுக் கொண்டு, அறிக்கை செய்கின்றோம். அவருடைய பரிசுத்தத்திற்கும், கர்த்ததுவதிற்கும் முன்பாக எந்த ஆளுகையும், எதிர்க்கும் சக்திகளும் நிலைநிற்பதில்லை. அவருடைய பரிசுத்த பிரசன்னத்திலேமாத்திரமே நம்முடைய ஆத்துமா திருப்த்தியை கண்டடைகின்றது.

**வெளிப்படுத்தல் 1:8**

நான் அல்பாவும், ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்.

**ஜெபம்:** பரமண்டலங்களிலே இருக்கின்ற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய பரிசுத்த பிரசன்னத்திலே மாத்திரமே என் ஆத்துமா நிறைவடையும். உம்மிடத்தில் சேரும்படியான பாக்கித்தை தந்ததிற்காக நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன்

# தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்டவர்கள்

**1 பேதுரு 1:15**

**உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.**

இன்ரநெற் ஊடகங்கள் வழியாக வரும் நெறிகெட்ட வீடியோ பதிவுகளை பார்த்து, தகாத வார்த்தைகளை பேசுகின்ற இரண்டு நண்பர்கள், மதுபானத்தை அருந்திய பின்பு, அவர்கள் வாழ்ந்து வரும் வீட்டிற்கருகே, உத்தமனாக வாழ்ந்து வரும் ஒரு விசுவாசியின் நீதியான வாழ்க்கையைக் குறித்து மேன்மையான பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்த விசுவாசியின் வாழ்க்கையைக் குறித்து கூறிய காரியங்கள் உண்மையாக இருந்தபோதிலும், அவர்கள் கூறுகின்ற அந்த உண்மையான வார்த்தைகளால் அவர்களுக்கு எந்தப் பலனுமில்லாததும் அவர்கள் வாழ்க்கையிலே அந்த வார்த்தைகள் கருதற்றதுமாக இருந்தது. அதுபோலவே, பரமண்டத்திலிருக்கின்ற பிதாவை நோக்கி: உம் முடைய நாமம் பரிசுத்தம் என்று எவரும் கூறிக் கொள்ளலாம். அது மாறாத சத்தியம். ஆனால், அந்த வார்த்தையானது, கூறுபவனுக்கு பலனுண்டாக்கும்படிக்கு, அவன் தேவனாகிய கர்த்தருக்கென்று வேறு பிரிக்கப்பட்டவனாக காணப்பட வேண்டும். கர்த்தருடைய நாமத்தை கூறுகின்றவனெவனும் அநியாயத்தை விட்டு விலகிக் கொள்ள வேண்டும் என்ற வார்த்தையின்படி, நாம் ஜெபம் செய்யும் போது, சகல அநியாயங்களை விட்டு விலக வேண்டும். அக்கிரம சிந்தையோடு ஏறெடுக்கப்படும் ஜெபத்தை தேவன் கேட்கமாட்டார் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. நாம் நம்முடைய பிதாவாகிய தேவனுடைய நாமம் பரிசுத்தம் என்று கூறும் போது, நாம் கர்த்தராகய தேவனை நம்முடைய இருதயங்களிலே பரிசுத்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். அதாவது, நாம் ஒரே நாளிலே முற்றிலும் குற்றமற்ற பூரண பரிசுத்தவானாக மாற வேண்டும் என்பது பொருளல்ல. மாறாக, வெளியரங்கமாக மாத்திமல்ல, இதயபூர்வமாக நாம் வேறு பிரிக்கபட்ட வாழ்க்கைக்கு நம்மை ஒப்புக் கொடுத்து, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடு காத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கை களெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. (1 பேதுரு 1:14-16). இந்த உலகிலே நாம் பரிசுத்த வாழ்க்கை வாழுபடிக்கு பரிசுத்த ஆவியானவர்தாமே நமக்கு துணை செய்கின்றவராயிருக்கின்றார்.

**ஜெபம்**: பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு என்னை வேறுபிரித்த தேவனே, இந்த உலகத்திலே என்னை எதிர்க்கும் பொல்லாத சக்திகளோடு, போராடி ஜெயங் கொள்ளும்படிக்கு என்னை உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# கர்த்தரிடத்தில் மன்னிப்பு உண்டு

"நாம் தேவனுக்கேற்ற பரிசுத்தர்களாக இருக்க வேண்டும்" என்று கூறுவதினால், பறிகாரர், அநியாயக்காரர், விபசாரகாரர், பாவிகள் போன்றவர்கள் தேவனை நோக்கி ஜெபம் செய்ய முடியாதா? அவர்கள் ஜெபம் செய்தால் தேவன் அதை கேட்க மாட்டாரா? நீதிமான் என்று தன்னை கருதிக் கொண்ட பரிசேயனும், பாவிகள் என்று சமுதாயத்தினால் தள்ளிவிடப்பட்ட ஆயக்கா ரர் குழுவை சேர்ந்த ஒரு மனுஷனும் ஜெபம் செய்யும்படி தேவ ஆலயத்திற்கு சென்றார்கள். ஆனால், வீடு திரும்பும் போது, பாவியென்று கருதப்பட்ட ஆயக்காரனின் ஜெபமே தேவனுக்கு பிரியமுள்ள ஜெபமாக இருந்தது. அவன் பரிசுத்தவானாக வாழவில்லை. அதனால், அவன் ஆலயத்திற்கு கிட்டே செல்ல பெலனில்லாதவனாய், தூரத்திலே நின்று, தன் குற்றங்களினிமித்தம் தன் கண்களை வானத்திற்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித் துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று வேண்டிக் கொண்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, மனந்திரும்புகின்ற எந்த பாவியையும் தேவன் அணைத்து தம்மிடம் சேர்த்துக் கொள்கின்றார். மனந்திரும்பின பாவி, மறுபடியம் பாவ செயல்களிலே போக்கும் வரத்துமாக இருக்க மாட்டான். ஒருவேளை அவன் பாவம் செய்தால், அவன் தன் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கின்றார். (1 யோவான் 1:9). ஆனால் இன்று ஒளியிலே வாழ்கின்றேன் என்று கூறும் சிலர், இருளின் அதிகாரத்திற்குள் சிறைப்பட்டிருக்கின்றவர்களோடு ஐக்கியமாக இருந்து வருகின்றார்கள். தங்களை நீதிமான் என்று கூறிக் கொள்பவர்கள், அநீதி செய்பவர்களோடு கைகோத்து சம்பந்தம் கலக்கின்றார்கள். தேவனுடைய வீட்டிற்குள் விக்கிரகங்களை கொண்டு வருவதைக் குறித்து நியாயப்படுத்த எத்தனிக்கின்றார்கள். இப்படியாக தேவனை அறிந்தும் துணிகரமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு வரும் ஒருவன், பரமண்டத்திலிருக்கின்ற பிதாவை நோக்கி: உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று கூறும் போது, அந்த அறிக்கையிலே பரம பிதா பிரியப்படுவாரோ? இல்லை. முதலாவதாக அவன் தன் பொல்லாத விட்டுவிட தீர்மானம் செய்து கொள்ள வேண்டும்.

**ஏசாயா 55:7**

**துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும்விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக் கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்;**

**ஜெபம்:** ஒருவரும் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்றும் விரும்பும் தேவனே, நான் எப்போதும் உமக்கு முன்பாக உண்மையுள்ளவனாக காணப்படும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | ஆனி 13

📖 மாலை வாசகம் – எபிரெயர் 10:26

# ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொருவனின் வீட்டின் பின் வளவிலே ஒரு மரம் இருந்தது. அவன் வீட்டின் அருகிலே இருந்த காட்டுப் பகுதியிலிருந்துவரும் வனவிலங்குகளுக்கு அந்த மரம் வதிவிடமாக இருந்தது. அதனால், அந்த மனிதனுக்கும், அவனுடைய குடும்பத்தினருக்கும், அயலிலே வாழ்ந்து வந்த குடும்பங்களுக்கும் பெருந் தொல்லையாக இருந்து வந்தது. அதனால், வனவிலங்குகளின் கழிவுகளும், குப்பைகளும், பெருகிக் கொண்டே இருந்தது. வருடாவருடம் அந்த மரம் வளர்ந்து பெரும் விருட்சமாகிக் கொண்டிருந்தது. வனவிலங்குகளினால் உண்டாகும் ஆபத்துக்களும் பெருகிக் கொண்டிருந்தது. எனினும், அதை தறித்துப் போட மனதில்லாதவனாய், தன் வளவை சுத்தம் செய்வதற்கு பெருந்தொகையான பணத்தையும், நேரத்தையும் விரயப்படுத்தி வந்தான். இந்நாட்களிலே சில விசுவாச மார்க்கத்தாரும், அந்த மனிதனு க்கு ஒப்பாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இரட்சிப்படைந்து பல ஆண்டுகள் சென்ற பின்பும், பரிசுத்த ஆவிக்காக, அவருடைய வழிநடத்துதலுக்காக, வாரந்தோறும் ஜெபித்து வருகின்றார்கள். இதை ஆண்டாண்டு காலமாக செய்து வருகின்றார்கள். ஆனால், தங்கள் வாழ்விலே அடிப்படையாக இருந்து வரும், கீழ்படியாமை மற்றும் வன்மம், பகை, கசப்புக்களை விட்டுவிட மனதில்லாமல், அவற்றை பரா முகமாக விட்டு விட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தேவை என்று ஓயாது ஜெபிக்கின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, தேவ ஆவியானவரின் வழிநடத்துதலுக்காக நாம் ஜெபிப்பது மிகவும் நல்லதும், அவசியமானதொன்றாகவும் இருக்கின்றது. ஆனால், ஒருவன் தன் வாழ்விலே இருக்கும் மாம்ச இச்சைகளை வளர்ந்து கொண்டு போவதை அறிந்து கொண்டு, அதைவிட்டுவதற்குரிய வழியை அறிந்திருந்தும் அதை பின்பற்ற மனதில்லாதவனாக, தொடர்ந்து அதிலே வாழ்ந்து கொண்டு, பரலோகத்திலே இருக்கின்ற பிதாவாகிய தேவனை நோக்கி, நீர் பரிசுத்தமுள்ளவர் என்று கூறிக்கொள்ளவதினாலும், வரங்களை தரும்படி வேண்டிக் கொள்ளவததினாலும் அவனுக்கு பலன் என்ன? உங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்து, தேவனுக்கேற்ற வழியிலே நடவுங்கள்.

**ஏசாயா 59:1**

**உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள்பாவங்களே அவர் உங் களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.**

**ஜெபம்:** இருதங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, வேதனை உண்டாக்கும் வழிகள் என்னிடத்தில் இருந்தால், அவைகளை விட்டுவிட எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பில் பரிசுத்தமுள்ளவர்களாகும்படிக்கு...

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த தகப்பனானவர், தன் பிள்ளைகளை மிக அதிகமாக நேசித்து வந்தார். பிள்ளைகளும் தங்கள் தகப்பனானவரை மிகவும் அன்பு செய்து வந்தார்கள். ஒரு நாள், அவருடை பிள்ளைகளில் ஒருவன், அவன் கல்வி கற்று வரும் பாடசாலையிலே, தன் நண்பர்க ளோடுசேர்ந்து, குற்றமொன்றை செய்து விட்டான். இது வேதனைகளு க்கு ஆரம்பம் என்று அறிந்து கொண்ட தகப்பனானவர், குற்றம் செய்த தன் மகனானவன் திருத்தப்பட வேண்டும் என்பதற்காக அவனை தண்டித்து, அவன் செல்ல வேண்டிய வழியை அவனுக்கு காண்பித்தார். தான் மிக வும் நேசிக்கும் மகனை தண்டிப்பது தகப்பனானவருக்கு இலகுவான காரி யமாக இருக்கவில்லை. ஆனால், அவன் திருத்தப்பட வேண்டிய இடத் திலே திருத்தப்படாவிட்டால், எதிர்காலத்திலே பாதகமான தீங்கிற்கெ ன்று அவனை ஆயத்தப்படுத்துகின்றவராக இருப்பேன் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, பரலோகத் திலே இருக்கின்ற நம்முடைய பரம பிதா அன்புள்ளவர். அதற்கு மாற்று கருத்து ஏதும் இல்லை. அதே வேளையிலே அவர் பரிசுத்தமுள்ளவர். இன்று சில விசுவாசமார்க்கத்தார், பிதாவாகிய தேவன் அன்புள்ளவர், கிருபை நிறைந்தவர் என்று கூறி, பிள்ளைகள், சகோதரர்கள், விசுவா சிகள், ஊழியர்கள் தவறும் போது கண்டித்து திருத்தப்பட செய்யப்பட வேண்டிய இடத்திலே அவற்றை பாராமுகமாக விட்டு விடுகின்றார்கள். இவை சிறிய தவறுகள், நாங்கள் அதை விட்டுப்பிடிக்க வேண்டும் என்று அவற்றை மூடி மறைக்க எத்தனிக்கின்றார்கள். இப்படிப்ப ட்டவர்கள், சிறிய குற்றம் செய்தவர்களை, பெரிதான பாதகத்திற்குள் விழுத்தும்படிக்கு, அவர்களை பயிற்சிவிக்கின்றவர்களாக இருக்கின் றார்கள். நம்முடைய பரம பிதாவின் அன்பு தூய்மையுள்ளதாக இரு ப்பதால், அவர் குறித்து காலத்திலே, தான் நேசிக்கின்றவர்களை கடிந்து கொண்டு சிட்சிக்கின்றார். சிட்சையின் வேளையிலே, சிலர் முன்னி லையிலே அவமானமடைய நேரிடலாம். அதை தவிர்த்துக் கொண்டால், ஒரு நாள் வாழும் சமூகத்தின் முன்னிலையில் அல்லது ஊரார் முன்னி லையின் அவமானமும் நிந்தையும் அடைய நேரிடலாம். அதாவது, எல்லா சின்னஞ்சிறிய குற்றங்களும் பகிரங்கமாக கண்டிக்கப்பட வேண் டும் என்பது பொருளல்ல, மாறாக, நீதி எது, அநீதி எது, சரி எது, பிழை எது என்று கற்பித்து கொடுக்க வேண்டிய இடத்திலே அவற்றை கற்பித்துக் கொடுக்க வேண்டும்.

**எபேசியர் 1:4**

தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு,

**ஜெபம்**: அன்பில் என்னை பரிசுத்தனாக்க சித்தம் கொண்ட தேவனே, அன்புக்கு எல்லை இல்லை என்று நான் பாவத்திலே வாழாதபடிக்கு, மனந்திரும்பி, நாளுக்கு நாள் பரிசுத்தமடையும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யாருடைய குற்றத்தை மன்னிப்பது?

ஒரு மனிதனாவன், கிராமத்தின் கூட்டுறவு சங்கத்திலே சில கோதுமை மா மூடைகளை களவு செய்யும் போது பிடிக்கப்பட்டு, விசாரிக்கப்படும் படிக்கு மூப்பர் சங்கத்தின் முன் கொண்டு வரப்பட்டான். அந்த சங்கத்திலே இருந்து மூப்பர் ஒருவர், அவன் எவரையும் அடிக்கவோ, காய ப்படுத்தவோ இல்லை, எனவே அவனுக்கு தண்டனை ஏதுமில்லாமல் அவனை விட்டுவிடும்படி அவனுக்காக பரிந்து பேசிக் கொண்டிருந்தார். அந்த இடத்திலே மூப்பர்கள் மத்தியில் கரு த்து முரண்பட்டதால், மூப்பர் சங்கத் திலே பிரிவு ஏற்படுவது நல்லதல்ல என்பதற்காக, மற்றவர்கள் யாவரும் அவனை மன்னித்து விட்டுவிட இணக்கம் தெரிவித்தார்கள். சுமார், ஒரு மாதத்திற்கு பின், களவெடுத்த மனிதனை மன்னித்து விட வேண்டும் என்று வாதாடிய மூப்பரின் பண்ணையிலே, அதே மனிதன் சென்று ஒரு மூடை நெல்லை களவு செய்யும் போது அகப்பட்டுக் கொண்டான். காரியமானது மூப்பர் சங்கத்திற்கு வந்தபோது, முன்பு அவனை மன்னி த்து விட வேண்டும் என்று கூறிய மூப்பனானவர், அவனை கடுமையாக தண்டிக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தார். அதைக் அவதானி த்துக் கொண்ட, சிரேஷ்ட மூப்பனானவர், அந்த மூப்பரை நோக்கி: மற்ற வர்களுடைய பொருளை ஒருவன் களவு எடுத்தால், அது மன்னிக்கப்பட வேண்டும் ஆனால் உன்னுடைய சிறிய பொருளை ஒரு வன் களவு எடுத்தால் அவன் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டுமா? முதலாவது, நீ பொது மன்னிப்புக்காக பரிந்துபேசி மற்றவர்கள் முன்னிலையில் உன்னை நீதிமானாக காண்பிக்க முன்பு, நீ உனக்கு எதிராக குற்றம் செய்தவனை மன்னிக்க பழகிக் கொள் என்று கடிந்து கொண்டார். ஆம் பிரியமானவர்களே, இன்று இப்படிப்பட்ட காரியங்களை, விசுவாச மார் கத்தார் மத்தியிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. சபை, சபையோர் சார்ந்த எந்த குற்றங்களுக்கும் எதிர்த்து நின்று வாதாடும்படி சில விசுவாசிகள் ஊழியர்கள் எப்போதும் ஆயத்தமுள்ளவர்களாகவே இரு க்கின்றார்கள். ஆனால், தங்களுக்கோ தங்களுடையவர்களுக்கோ எதி ராக செய்யப்படும் குற்றங்களுக்கு எந்த இரக்கத்தையும் காண்பிப்ப தில்லை. ஒருவன் வேறொருவனுக்கு எதிராக குற்றம் செய்யும் போது, குற்றம் செய்தவனை காப்பற்றும்படிக்கு, மற்றவனுக்கு செய்யப் பட்ட அநியாயங்களை மூடி மறைப்பது அன்பு அல்ல, அது அநீதி. எனவே, முதலாவதாக, சொந்தக் கணக்கிலே மன்னிக்க பழகிக் கொள்ளுங்கள்.

**எபேசியர் 4:32**

**கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவரு க்கொருவர்மன்னியுங்கள்.**

**ஜெபம்:** நீதியும் நியாயமுமுள்ள பரிசுத்தமுள்ள பரலோக தந்தையே, நான் நீதியை நடப்பிக்கவும், முதலாவதாக என்னுடையதிலிருந்து எடுத்து மற்றவர்களுக்கு கொடுக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எதற்காக அதிகமாக பிரயாசப்படுகின்றீர்கள்

**மத்தேயு 6:33**

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்

நாம் ஜெபத்திற்கு செல்லும் போது, பரலோக பிதா என்று நம் தேவனை அழைப்பதினாலே ஆறுதல் அடைகின்றோம். அவருடைய நாமம் பரிசுத்தம் என்று அறிக்கை செய்து, அந்த அறிக்கையின்படி வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ ஒப்புக் கொடுக்கும் போது, நம்முடைய வாழ்விலே பெரிதான விடுதலையும், சமாதானமும் உண்டாகின்றது. கடந்த நாட்களிலே இவைகளை குறித்து தியானித்து வந்தோம். இந்த உலகிலே வாழ்கின்ற மனிதர்கள் தேவனிடத்தில் ஜெபிக்கும் போது அவர்கள்எப்படிப்பட்ட தேவைகள் பொதுவாக கூறிக்கொள்கின்றார்கள்? எதைக் குறித்து கவலையடைகின்றார்கள்? எதற்காக அவர்கள் அதிகமாக பிரயாசப்பகின்றார்கள். பொதுவாக மனிதர்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, உறையுளை நாடித் தேடுகின்றார்கள். தங்களுடையதும் தங்கள் பிள்ளைகளுடைய எதிர்காலத்தை குறித்த கவலையால் மனிதர்கள் மனம் தொய்ந்து போய்விடுகின்றது. இதனால் அவர்கள் மனச் சமாதானத்தை இழந்து, நோய்வாய் பட்டு போய்விடுகின்றார்கள். இவைகளை அடையும்படிக்கு, இரவு பகலாக கல்வி கற்கின்றார்கள். இன்னும் அதிகமாக பிரயாசப்பட்டு, சற்று சேர்த்து வைத்தால், நாளைக்கு தங்களுடைய பிள்ளைகள் தாங்கள் பட்ட கஷ்டங்களை பட மாட்டார்கள் என்று எண்ணி, ஓயாமல் உழைக்கின்றார்கள். கல்விக்காக ஞானத்தை கேட்கின்றார்கள். பணத்திற்காக நல்ல வேலை வேண்டும் என்று ஜெபம் செய்கின்றார்கள். வியாபாரம் பெருகும்படிகது ஆசீர்வாதத்தை நாடி நிற்கின்றார்கள். இவை யாவற்றையும் பரமண்டலத்திலே இருக்கின்ற நம்முடைய பரிசுத்தமுள்ள பிதா அறியாதிருக்கின்றாரோ? நம்முடைய தேவைகள் இன்னதென்று அவருக்கு தெரியதோ? எதிர்காலம் அவருடைய கைகளை விட்டு நழுவி சென்று விட்டதோ? பரியமானவர்களே, நம்முடைய பரம தந்தை எல்லாவற்றையும் அறிந்திருக்கின்றார். அவரை இன்னார் என்று அறியாதவர்களே, இவைகளை நாடித் தேடி, பிரயாசப்பட்டு, தங்கள் நிம்மதியையும், தங்களை சூழ இருக்கின்றவர்களுடைய நிம்மதியையும் குலைத்து விடுகின்றார்கள். நீங்களோ, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை வாஞ்சையோடு தேடுங்கள். தேவ ராஜ்யத்தின் நீதியை நாடுங்கள். ஜெபிக்க செல்லும் போது, கருத்தோடு அதை அறிக்கையிடுங்கள். மிகுதியான யாவற்றையும் நீங்கள் அடைந்து கொள்வதற்கு, பரலோகத்திலே வீற்றிருக்கின்ற நம்முடைய பரம பிதா வழிகளை உண்டு பண்ணுவார்.

**ஜெபம்:** பரலோகத்திலே வீற்றிருக்கின்ற பரம தந்தையே, உம்முடைய ராஜ்யத்தைக் குறித்த வாஞ்சை என்னில் பெருகும்படிக்கு, அதன் மேன்மையை உணர்ந்து கொள்ளும் இருயத்தை தந்து வழிநடத்டதிச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ ராஜ்யத்தை நாடுங்கள்

கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்கு பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று முன்னறிக்கவந்த தீர்க்கதரிசியாகிய யோவான்ஸ்நானன், ஜனங்களை நோக்கி: பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். பரலோக ராஜ்யம் எப்படி நமக்கு சமீபமாயிற்று? அப்படியானால் அது எப்படி தூரமானது? ஆதியிலே, ஆதாம் ஏவாள் ஏதேனிலே தேவனுடைய சத்ததிற்கு கீழ்படியாமல், தங்களை பிசாசாவனுடைய வழிக்கு ஒப்புக் கொடுத்ததினால், தேவ மகிமையை இழந்து, நித்திய ஆக்கினைக்கு தங்களை ஒப்புக் கொடுத்து, பரலோகத்திற்கு பகைஞரானார்கள். தேவனுடைய ராஜ்யம் அவர்களுக்கு தூரமானது. “அக்காலத்திலே இயேசு கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலு டைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிப்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.” அதாவது, நமக்கு அடைந்து கொள்வதற்கு சாத்தியமற்றதாக இருந்த தேவ ராஜ்யமானது, மீட்பராகிய இயேசு கிறிஸ்து வழியாக சாத்தியமாயிற்று. “எப்படியெனில், அவரே நம்முடைய சமாதானகாரராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையை சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும், ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.” (எபேசியர் 2ம் அதிகாரம்). எனவே, நாம் நன்றாக புசித்து, குடித்து, சுகபோகமாக வாழ்ந்து, நான் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்று கூறியும், ஆத்துமா கெட்டுப் போனால் அதனால் உண்டாகும ஆதாயம் ஒன்றுமில்லை. ஆதலால், நாம் ஜெபிக்கும் போது, எப்பொழுதும், நித்தியமானதை வாஞ்சித்து, நாடித் தேட வேண்டும். அதை நாம் அடைந்து கொள்ளமுடியாதபடிக்கு தேவ ராஜ்யமானது, அதிக தூரத்திலில்லை. தேவ ராஜ்யம், கிறிஸ்து வழியாக நமக்கு சமீபமாகவே இருக்கின்றது.

**அப்போஸ்தலர் 17:27**

**கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே.**

**ஜெபம்:** நித்தியமானதை சுதந்தரித்துக் கொள்ளும்படி என்னை அழைத்த தேவனே, புசித்து, குடித்து, சுகபோகமாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தைவிட்டு, உம்முடைய ராஜ்யத்தை ஆர்வத்துடன் தேட கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | ஆனி 18 | 📖 மாலை வாசகம் – 1 கொரி 2:12

# தேவ ராஜ்யம் எங்களுக்குள்

ஒரு ராஜா தன் ராஜ்யத்தை நல் ஆளுகை செய்யும் போது, தீமைக்கு அங்கே இடமிருக்காது. தீமையானது அதை மேற்கொள்ள முடியாது. ஆதிப் பெற்றோர் செய்த பாவத்தினால், தீமையானது இந்த உல கத்திலே உண்டானது. இருளின் ராஜ்யம் மனிதர்களை ஆண்டு வந்தது. அதன் விளைவாக அநீதியும், அநியா யங்களும், அக்கிரமங்களும் பெரு கிற்று. நித்திய மரணம் மனிதர்களை ஆண்கொண்டது. பாதாளம் மனிதர் களை அடக்கிப் போட்டது. தேவனு டைய ராஜ்யம் இந்த பூமிக்கு வரும் போது, முதலாவதாக, மரணத்தின் கூர் உடைத்து,பாதாளத்தை தோற் கடி த்து, இருளின் அதிகாரத்திலிரு ந்து மனிதர்கள் ஆச்சியமான ஒளிக்கு கொண்டு வரப்பட வேண்டும். தேவ ராஜ்யத்தின் ராஜாவாகிய இயேசு கிறிஸ்து, அதை செய்து முடிப்பதற் காக சாந்தமுள்ளவராக இந்தப் பூமிக்கு வந்தார். ஆனால், அக்காலத் திலே வாழ்ந்து வந்த சிறப்பு குடிமக்களாகிய பரிசேயர், தேவ ராஜ்யத் தைக் குறித்து தப்பான எண்ணங் கொண்டிருந்தார்கள். அக்காலத்திலே தங்களை அடக்கி ஆளும் ரோமர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும். நாட் டிற்கு சுதந்திரம் வர வேண்டும். ஆளுகை தங்களிடத்தில் திரும்ப வேண் டும் என்ற எண்ணமுடையவர்களாக இருந்தார்கள். ஆண்டவராகிய இயேசு பரலோக ராஜ்யத்தைக் குறித்து அநேக உவமைகளை கூறியி ருந்தும், அதற்கு செவி கொடுக்க மனதில்லாதவர்களாக, தங்கள் இருத யத்தை கடினப்படுத்திக் கொண்டு ஆண்டவர் இயேசுவை நோக்கி: தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று கேட்டார்கள். அவர்க ளுக்கு பிரதியுத்தாரமாக, தேவனுடைய ராஜ்யம் பிரதியட்சமாய் வராது. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுவதற்கு ஏதுவிராது: இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கின் றதே என்றார். ஆம் தேவ ராஜ்யத்திற்கென்று வேறுபிரிக்கப்பட்ட பிரிய மானசகோதர சகோதரிகளே, இருளின் ராஜ்யத்தின் அதிபதியாகிய பிசா சானவன், உங்களை ஆளுகை செய்ய முடியாதபடிக்கு, தேவ ஆவி யானவர் உங்களுக்குள்ளே வாசம் செய்கின்றார். எல்லா நாமத்திற்கும் மேலாக இயேசுவின் நாமத்தினால், நாம் எல்லா அதிகாரங்களையும், துரைத்தனங்களையும் மேற்கொள்ளும், அதிகாரத்தையும், வல்லமையை யும்பெற்றிருக்கின்றோம். அந்த பாக்கியமானது தேவ ராஜ்யத்தின் ஆளு கை. அதுவெளியிலேயல்ல, எங்களுக்குள்ளே ஆளுகை செய்கின்றது.

**லூக்கா 11:20**

**நான் தேவனுடைய விரலி னாலே பிசாசுகளைத் துரத் துகிறபடியால், தேவனு டைய ராஜ்யம் உங்களிட த்தில் வந்திருக்கிறதே.**

**ஜெபம்**: பராக்கிரமமுள்ள பரலோக தேவனே, உம்முடைய ராஜ்யதின் இரகசியத்தை நான் உணர்ந்து கொள்ளும்படிக்கு, உம்முடைய ஞானத்தை எனக்கு தந்து, என்னை வழிநடத்திச் செல்வதற்காக நன்றி கூறுகின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ராஜ்யத்தின் நல்ல உக்கிராணக்காரன்

ஆண்டவராகிய இயேசு உயிர்தெழுந்து பரலோகத்திற்கு எழுந்தருளும் நாளிலே, தம்முடைய சீஷர்களை நோக்கி: அன்றியும், யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான் நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலதிலே ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர்: பிதாவானவர்தம்முடைய ஆதினத்திலே வைத்தருக்கி காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்தஆவி உங்களிடத்தல் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனுடைய ராஜ்யமானது தற்போது பிரதியட்சமாக வரமால், நம் இருதங்களிலே வந்திருக்கின்றது. நாம் அந்த ராஜ்யத்தின் புத்திரர்களாக, ராஜ்யத்திற்குரிய வேலையை செய்யும்படிக்கு, வேண்டிய யாவற்றையும் பிதாவாகிய தேவன் தாமே நமக்கு கொடுத்திருக்கின்றார். ராஜ்யத்தின் வேலைக்காக சகல சத்தியத்திலும் நம்மை வழிநடத்த, சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் நமக்குள்ளே வாசம் பண்ணுகின்றார். கர்த்தருடைய ராஜ்யம் பிரதியட்சமாக வரும் நாள் உண்டு. ஆண்டவராகிய இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கூறியது போல, அந்த நாளை எப்போது வரும் என்று அதைக் குறித்து விமர்சித்து, உங்களுக்கு கொடுக்கப்பட்ட நாட்களை விரயப்படுத்தாமல், ராஜ்யத்தின் நல்ல புத்திரர்களாக, தற்போது செய்யப்பட வேண்டிய வேலைகளை செய்வதே நமக்கு ஏற்புடையது. ராஜ்யத்தின் புத்திரர்கள் ராஜ்யத்தின் உக்கிராணக்காரர்கள். அவர்கள் ராஜ்யத்தின் பிரதிநிதிகள். எனவே நாம் ராஜாதி ராஜாவின் நல்ல சட்சிகளாக வாழ வேண்டும். தேவ ராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்கும் போது, இப்படியாக அந்த ராஜ்யத்தின் தன்மைகள் நம்மில் காணப்படும்படிக்கு நாம் நம்மை ஒப்புக் கொடுத்து ஜெபிக்க வேண்டும். ராஜ்யத்திற்கு ஆகாத காரியங்களை நம்மை விட்டு அகற்றி விடவேண்டும்.

**1 கொரிந்தியர் 4:1**

**இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின்ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக் கடவன்.**

**ஜெபம்:** பரலோகத்திலே தேவனே, உம்முடைய ராஜ்யத்தின் உக்கிராணக்காராக என்னை தெரிந்து கொண்டபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன். அந்த ராஜ்யத்தின் நல்ல உக்கிராணக்காரனாக வாழ பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக

# எங்களிடம் கொடுக்கப்பட்டவைகள்

அங்கே எழுப்தல் இங்கே எழுப்புதல், இப்போது, கிழக்கிலுள்ள தேசத்திலே இருக்கின்றார், முன்பு மேற்கிலேயுள்ள தேசத்தில் இருந்தார் என்று இன்று மனிதர்கள், மற்றய மார்க்கத்தார் புனித ஸ்தலங்களுக்களை தரிசிப்பதைப்போல, தேவராஜ்யத்தின் கிரியைகளை பார்க்கும்படி பெருந்தொகையான பணத்தை செலவழித்து பயணம் செல்கின்றார்கள். கர்த்தருக்கு சித்தமானால், அவர் மனிதர்கள் வழியாக வல்லமையுள்ள கிரியைகளை நடப்பிப்பார். ஆதி முதல் அப்படியாக அவர் வல்லமையுள்ள கிரியைகளை நடத்தி வருகின்றார். இன்று உலகத்திலே ஒரு வல்லமையுள்ள அதிசயமான கிரியையை தேவனாகிய கர்த்தர் நடப்பித்தால், அவருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! அதனால், கர்த்தர் உங்களை கைவிட்டார் அல்லது உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு மாறிவிட்டது என்பது பொருளல்ல. எகிப்திலே தம்முடைய ஜனங்களுக்காக, மோசே வழியாக, வியக்கத்தக்க அதிசயங்களை செய்தார். தம்முடைய வார்த்தைக் கேட்டு அதன்படி நடக்கும் படிக்கு அவர்களுக்கு ஆலோசனை கூறினார். தேவனுடைய கரத்தின் கிரியைகளை பலமுறை கண்டும், ஜனங்கள், தங்கள் இருதயத்தை கடினப்படுத்திக் கொண்டார்கள். தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அவர் சொன்ன காரியங்களை செய்வது அவர்களுக்கு கடினமாக இருந்தது. அதனால், வனாந்திரத்திலே நாற்பது வருடங்கள் அலைந்து திரிந்தார்கள். பிரியமானவர்களே, தேவனுடைய ராஜ்யமானது இதோ, இங்கே என்றும் அதோ, அங்கே என்றும் சொல்லப்படுவதற்கும் ஏதுவிராது, இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்று கர்த்தராகிய இயேசு கூறியதை நாம் கடந்து நாட்களிலே தியானம் செய்தோம். உங்கள் ஊரிலே பெரும் ஜனக்கூட்டம் திரண்டு வந்திருக்கின்றது, நான் அங்கே செல்வேன் என்று ஒரு ஊழியன் தன் வீட்டில் செய்யப்பட வேண்டிய காரியத்தை மறந்து போனால், அவனுடைய எஜமானனாவன் அவன்மேல் பிரியமாக இருப்பாரோ? ஆவர் உங்களை நம்பி தந்த சிறிய பொறுப்புக்களிலே கண்ணும் கருத்துமாக இருங்கள். சத்திய வேதத்திலே நிலைத்திருங்கள். எனவே, “நாம் இனி குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாய் பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாகிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைகொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருப்போமாக.”

**லூக்கா 17:21**

**இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்.**

**ஜெபம்:** தேவ ராஜ்யத்தின் புத்திரனாக என்னை ஏற்படுத்திய தேவனே, ஒரு நல்ல உக்கிராணக்காரனாக, நீர் எனக்கு கொடுத்தவைகளை உம்முடைய சித்தப்படி செய்து முடிக்க எனக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரமபிதா நடாத நாற்றுக்கள்

ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிறபிதாவைஸ்தோத்தரிக்கின்றோம். (கொலோ *1:12-13*). இந்த உலக்திலே தேவனுடைய ராஜ்யம் மனிதர்கள் மத்தி யிலேகிரியைசெய்து வருவது போல, இருளின் ராஜ்யமும் அதன் கிரியை களை நடப்பித்து வருகின்றது. சில வேளைகளிலே இருளின் ராஜ்யத் தின் கிரியைகளை வேறுபடுத்தி அறி ந்து கொள்வது, மிகவும் கடினமான காரியமாயிருக்கும். பரலோகராஜ் யம் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட நல்ல விதையை விதைத்த மனுஷ னுக்கு ஒப்பாயிருக்கின்றது. மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனு டைய சத்துரு வந்த, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர் விட்ட போது, களைகளும் காண ப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல் லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன் வேண்டாம் களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காத படிக்கு இரண்டையும் அறுப்பு மட்டும் வளரவிடுங்கள். அறுப்புக் காலத்தில் நான் அறுக்கின்றவர்களை நோக்கி: முதலாவது களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்கு கட்டுகளாக கட்டுங்கள்: கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார். பிரியமான சகோதர சகோதரிகளே, நம் மத்தியிலே வளர்ந்து வரும் களைகளில் சில, அவை கனிதரும் காலம் மட்டும், அவைகள் பயிர்களைப் போல காணப்படும். ஆனாலும், அவை இருளின் ராஜ்யத்திற்குரியவர்களாக இருப்பதால், அவர்களுடைய கனி யற்ற வாழ்க்கையானது அறுப்புக் காலத்திலே வெளிப்படும். எனவே நீங்கள் கனிகொடுக்கும்படிக்கு, வலது புறமோ, இடது புறமோ சாயாத படிக்கு தேவ வார்த்தையிலே நிலைத்திருங்கள். என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் என்று ஆண்ட வராகிய இயேசு கூறியிருக்கின்றார்.

**மத்தேயு 15:13**

என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்.

**ஜெபம்**: பரலோக ராஜ்யத்திற்கென்று என்னை வேறு பிரித்த தேவனே, இந்த உலகத்திலே கிரியையை செய்யும் அந்தார கிரிகைகளுக்கு நான் உடன்படாமல் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ என்னை வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிதானித்து அறியுங்கள்

ஒரு ராஜ்யத்திற்கு ஒரு ராஜா இருப்பார். அவருடைய சிங்காசனம் அவர் வாசம் பண்ணும் இடத்திலே அமைக்கப்பட்டிருக்கும். தேவனுடைய ராஜ்யமானது எங்கள் இருதங்களிலே வந்திருக்கின்றது. ஆண்டவராகிய இயேசுதாமே அந்த ராஜ்யத்தின் ராஜாவாக இருக்கின்றார். நம்முடைய இருதயமானது அவருடைய சிங்காசனம் இருக்கும் இடமாக இருக்க வேண்டும். சில வேளைகளிலே, தங்களை தேவனுடையவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் மனிதர்களுடைய வெளியரங்கமாக கிரியைகளும், அவர்களுடைய பேச்சுக்களும் அவர்களை தேவ பக்தியுடையவர்கள் போல காண்பிக்கலாம். ஆனால், அவர்கள் இருதயமோ தேவனுக்கு தூரமானதாயும், மாம்ச இச்சைகள் நிறைந்த வைகளாகவும் காணப்படும்.இந்த வெளி வேடமாக வாழ்க்கை சில வேளைகளிலே, வெளியே இருக்கின்றவர்களுக்கு குறித்த காலம் வரை வெளிப்படாமல் இருக்கலாம். சிலர் தேவ பக்தியின் வேஷத்தை தரித்து அதன் பலனை மறுதலிக்கின்றவர்களாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட இருதயத்தோடு வாழ்கின்றவர்கள், பரமண்டலங்களில் இருக்கின்ற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருக என்று ஒவ்வொரு நாளும் ஜெபிக்கலாம். ஆனால், அந்த ஜெபமானது அவர்களுடைய வாழ்கையிலே கருத்தற்றதாக இருக்கும். அவர்கள் இருதயமானது, ராஜாவாகிய ஆண்டவர் இயேசுவின் ஆளுகைக்கு உட்பட்டதல்ல. அவர்களுடைய இருதயம் ராஜாவாகிய இயேசுவின் சிங்காசனத்திற்கு ஏற்புடையதல்ல. தேவ ராஜ்யத்திற்கு என்று அழைக்கப்பட்ட தேவனு டைய பிள்ளைகளே, உங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். இன்று பற்பல விதமான பிரிவுகளுடனும், உலக வாழ்க்கைக்கு ஏற்றபடி பல்வேறுபட்ட உபதேசங்களுடனும், பலர் எழுந்து வந்து இயேசுவின் நாமத்தை வீணிலே வழங்குகின்றார்கள். பரிசுத்த வேதாகமத்தை கருத் தோடு வாசியுங்கள், அந்த வார்த்தைகளை தியானியுங்கள், தேவ வார்த் தைகளைக் குறித்த விதண்டாவாதங்களுக்கு உங்களை உட்படுத்தாமல், ஊக்கமாக ஜெபம் செய்யுங்கள். உண்மையுள்ள இருதயத்தோடு தேவனை நோக்கி பாருங்கள். சத்திய ஆவியானவர் தாமே நீங்கள் போக வேண்டிய வழியை உங்களுக்கு காண்பிப்பார். உங்கள் மனதில் தோன்றும் உணர்வுகளின்படி தீர்மானம் செய்யாமல், எல்லாவற்றையும் தேவ வார்த்தையின் வெளிச்சத்தில் சோதித்தறிந்து, நலமானதைப் பற்றிக் கொள்ளுங்கள். மேலானவைகளை நாடுங்கள்.

**1 தெச 5:21**

**எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** சுத்தமனட்சாட்சியை எனக்கு தந்த தேவனே, கோணலும் மாறுபாடுமான இந்த சந்தததியின் நடுவே, உம்முடைய சத்திய மார்க்கத்திலே நான் நடக்க, எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒரு தீமையும் நினைக்காத பரம தந்தை

வாலிபனொருவன், தன் நண்பர்களோடு சென்று கடற்கரையோரமாக பந்து விளையாடுவதற்கு, தன் தகப்பனானவரிடம் அனுமதி கேட்டான். வழமையாக, அந்த பாதுகாப்பான இடத்திலே விளையாடுவதற்கு அனுமதி கொடுக்கும் தகப்பனானவர் அந்த நாளிலே நண்பர்களோடு அங்கு செல்வதற்கு அனுமதி கொடுக்காமல், அவனை தடுத்து நிறுத்தினார். மகனானவனோ, மிகவும் கோபம் கொண்டான். தகப்பனானவர் ஏன் இப்படி செய்கின்றார் என்று மனம்நொந்தவனாகதாயாரிடம் முறையிட்டான். அதற்கு அவன் தாயானவள் அவனை நோக்கி: மகனே, இன்னும் சில நாட்களிலே, உன் உயர்கல்விக்கான மிக முக்கியமான நேர்முகத்தேர்வும், அனுமதி பரீட்சையும் நடக்க இருக்கின்றது. அதற்காக நீ உன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், இந்நாட்களிலே நீ ஓடி விளையாடி உன்னைக் காயப்படுத்தி, உடலை வருத்திக் கொள்ள கூடாது. உன் எதிர்கால நன்மை கருதியே அப்பா உன்னை தடுத்து நிறுத்தினார் என்று சொன்னார். பிதாவாகிய தேவனுடைய அநாதி சித்தத்தின்படி நித்திய வாழ்விக்கென்று அழைக்கப்பட்ட பிரியமான சகோதர சகோதரிகளே, மேற்கூறப்பட்ட சம்பவத்தின் கருபொருளாவது, வாலிப பிரயாயத்திலிருக்கும் அந்த மகனானவன், இன்றைய நாளுக்குரிய தன் மனவிருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்று பிடிவாதமுள்ளவனாக இருந்தான். ஆனால், அவனுடைய தகப்பனானவரோ, அற்பமான சந்தோஷத்திற்காக அவனுடைய எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்பட கூடாது என்று, அவனுடைய வாழ்விற்கு நன்மையானதை செய்தார். அதுபோலவே, நம்முடைய பரம பிதாவும், நம் வாழ்வில், அழிந்து போகும் இந்த உலகத்திற்குரியவைகள் ஒரு வேளை நன்மையானதாகவும், பாதகமற்றதாகவும் நம்முடைய அறிவுக்கு தென்படாலம். ஆனால் எந்தக் காரியமும் நம்முடைய பரம அழைப்பின் பந்தையப் பொருளை இழந்து போகாப் பண்ணாதபடிக்கு, நம்முடைய வாழ்க்கையைக் குறித்து எண்ணமுள்ளவர்ராக இருக்கின்றார். காலங்களை அறிந்த சர்வ வல்லமையுள்ள தேவனானவர், ஒரு தீமையையும் நினைக்காதவரும், உச்சிதமானவைகளை தன்னு டைய பிள்ளைகளுக்கு கொடுக்கின்றத அருமையான நல்ல தந்தையாக இருக்கின்றார். எனவே, அவருடைய சித்தமானது நம்முடைய வாழ்க் கையிலே நிறைவேறும் படிக்கு, நாம் நம்மை ஒப்புக் கொடுப்போமாக.

**எபிரெயர் 12:10**

இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.

**ஜெபம்:** உம்முடைய குமாரனென்றும் பாராமல், மீட்பர் இயேசுவை எனக்காகவும் கொடுத்த தேவனே, உம்முடைய திருச்சித்தமானது என்னு டைய வாழ்விலே நிறைவேற நான் இடங்கொடுக்க உணர்வுள்ள இருத யத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மெய் ஞானத்தை தரும் பரம பிதா

ஆதியிலே ஏவாள், தன் கண்களின் இச்சையினாலே இழுப்புண்டு, தேவனாகிய கர்த்தர் விலக்கிய கனியானது, புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதும் என்று கண்டு, அதை புசித்து, பிசாசானவனினால் வஞ்சிக்கப்பட்டுப் போனாள். தேவனுடைய கட்டளைகள் எப்போதும் மனிதர்களை நல்வழிப்படுத்தும். அதை ஒருவன் மீறும் போது, தன் வாழ்விலே தீமைகளை வரவேற்றுக் கொள்கின்றான். அவ்வண்ணமாகவே, நம்முடைய ஆதிப் பெற்றோராகிய ஆதாம் ஏவாள், தேவனுடைய கட்டளையை மீறியதால், நன்மை தீமை அறியும் அறிவை அடைந்தார்கள். நன்மையை அறிந்திருந்த நாட்களிலேயே அவர்கள் தேவ கட்டளையை கைகொள்ளாமல் தங்கள் மனவிரும்பத்தை நிறைவேற்றினார்கள். அப்படியானால், இப்போது நன்மை தீமை அறியும் அறிவை பெற்றிருக்கும் போது, அவர்கள் தீமையை பற்றிக் கொள்வது அதிக நிச்சயமாக இருக்கும் அல்லவா? அவர்கள் வழி வந்த மனித குலத்திற்கு நன்மை தீமை அறியும் அறிவு உண்டு. ஆனால், தங்களுடைய வாழ்க்கைக்கு நன்மையானது எது என்பதை நிதானித்து அறியும் தேவ ஞானம் அவர்களிடத்தில் இல்லை. ஆதியிலிருந்து இன்று வரை எப்படியாக தீமை இந்த உலகத்திலே மலிந்து கொண்டே போகின்றது என்பது அதற்கு உறுதியான சாட்சியாக இருக்கின்றது. அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன், நன்மை செய்யவேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திடத்திலிருக்கிறது, நன்மை செய்வதே என்னிடத்திலில்லை, ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கின்றேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. ஆனபடியால் நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தல் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன் என்று மனிதனுடைய மனநிலையை குறித்து தேவ ஊழியராகிய பவுல் கூறியிருகின்றார். (ரோமர் 7: 18-24). எனவே, நன்மையை நடப்பிக்க செய்கையையும் விரும்பத்தையும் உண்டுபண்ணுகின்ற தேவனை பற்றிக் கொள்ளுங்கள். தூய ஆவியானவர்தாதே நன்மையானதை நடப்பிக்க உங்களை நடத்திச் செல்வார்.

**யாக்கோபு 1:17**

**நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது;**

**ஜெபம்:** நன்மையான ஈவுகளையும், பூரணமான வரங்களையும் பரத்திலிருந்து பொழிகின்ற பிதாவே, தீமைகள் மலிந்து கொண்டே செல்லும் இந்த உலகிலே, நன்மையை கண்டடைய மெய் ஞானத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சுய கொள்கைகளின் முடிவு

இது என்னுடைய வாழ்க்கை. என்னுடைய கனவுகளை நான் அடையும் படிக்கு அவைகளை பின்பற்ற வேண்டும். நான் விரும்பிய துறையிலே, எனக்கு விருப்பான கல்லூரியிலே கல்வி கற்ற வேண்டும். எனக்கு பிடித்தவ நபரை வாழ்க்கைத் துணையாக கொள்ள வேண்டும். என்று பற்பல கொள்ளை கோட்பாடுகளை மனிதர்கள் கூறுவதை நீங்கள் கேட்டிருப்பபீர்கள். அப்படியாக தங்கள் மனவிரும்பப்பபடி காரியங்களை நடப்பிப்பவர்களின் வாழ்க்கையை சில ஆண்டுகளுக்கு பின்னர் ஆராய்ந்து பாருங்கள். வாழ்க்கையிலே எத்தனை குழப்பங்களையும், கலகங்களையும் ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். பிரச்சனைகள் கார்மேகங்களைப் போல சூழ்ந்து நிற்கும் போதும், சிலர், நல்ஆலோசனைகளை தள்ளி, என் பிரச்சனைகளை எப்படி தீர்த்துவைப்பது என்று எனக்குத் தெரியும் என்று அகங்காரமாக கூறிக் கொள்வபர்களும் உண்டு. பின்னர் வாழ்வில் ஏற்பட்ட ஒரு பிரச்சனையை தீர்த்துக் கொள்வதற்கு இன்னும் அநேக பிரச்சனைகளை உண்டாக்கி, தங்களுக்கும் தங்கள் சூழ உள்ளவர்களுக்கும் பல பாதகமான பின்விளைவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். எந்த மனிதன் இக்காரியங்களுக்கு நான் விதிவிலக் கானவன் என்றும், நான் என் சொந்த தீர்மானத்தின்படி செய்தவகள் யாவும் பூரண மானது என்று கூறிக் கொள்ள முடியும்? சிலருடைய வாழ்க்கை வெளியரங்கமாக இருக்கின்றது ஆனால் அநேகருடைய காரியங்களை இன்னும் மறைவாகவே இருக்கின்றது. நமக்கு பாவமில்லையென்போமானால் நம்மைநாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் தேவனை பொய்யராக்குகிறவர்களாயிருப்போம். அவருடைய வார்த்தை நமக்குள் இராது. *(1 யோவான் 1:8,10)* என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. எனவே, ஒவ்வொரு சூழ்நிலைகளிலும், நாம் யாவரும் தேவ சித்தம் நம் வாழ்விலே நிறைவேற இடங்கொடுக்க பழகிக் கொள்ள வேண்டும். அதை எப்படி அறிந்து கொள்வது? நம்மை சத்திய வழியிலே நடத்தும் வேதத்தை இரவும் பகலும் தியானம் செய்ய வேண்டும். அந்த ஞான வார்த்தைகள் எப்போதும் நம் இருதயத்திலும் இருக்க வேண்டும். அனுதினமும் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். தேவ ஆலோசனைகள் கூறும்படி நியமிக்கப்பட்டவரிகளின் ஆலோசனையை கேட்க வேண்டும். அப்போது ஞானமுள்ளவர்களாக நடந்து கொள்ளலாம்.

**சங்கீதம் 119:1**

**கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.**

**ஜெபம்:** வாழ்வு தரும் வார்த்தைகளை எனக்கு தந்த தேவனே, உம்முடைய வார்த்தையை கேட்கின்றவனாக மட்டுமல்ல, அவைகளை என் வாழ்வின் சூழ்நிலைகளின் கைகொள்ளும் இருதத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என்னுடைய வாழ்க்கையில் தேவ சித்தம்

நம்முடைய பிதாவாகிய தேவன் பரமண்டலத்திலே இருக்கின்றார். அங்கே அவருடைய சித்தம் சம்பூரணமாக செய்யப்படுகின்றது. அதாவது, இதை செய், இதை செய்யாதே என்று அங்கே கூறுப்படுவதில்லை. பரம பிதாவின் பூரண ஆளுகை அங்கே இருக்கின்றது. அங்கே வாசமாக இருக்கும் தேவ தூதர்களும், வல்லமையுள்ள சிருஷ்டிகளும், தேவ சித்தத்தை கட்டளையாகவோ, கடமையாகவோ செய்வதில்லை. தேவசித்தத்தை செய்வது அவர்களுடைய சுபாமாக இருக்கின்றது. அவ்வண்ணமாக அவருடைய சித்தமானது இந்த பூவுலகிலும் செய்யப்பட வேண்டும் என்பது நம்முடைய ஜெபத்தின் முக்கிய அம்சமாக இருக்க வேண்டும் என்பதை ஆண்டவராகிய இயேசு கற்றுக் கொடுத்திருக்கின்றார். "பரமண்டலத்திலே உம்முடைய சித்தம் செய்யப்படுவது போல, இந்த பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஜெபத்திலே கூறிவிட்டு நம் வழியே சென்று விடுவது கடினமான காரியமல்ல. அவருடைய சித்தமானது இந்தப் பூமியிலே செய்யப்படுவதாக என்று கூறும் போது, நாம் எதை அறிக்கை செய்கின்றோம். உலகதிலே இருக்கும் தேசங்களிலே, அதிகாரிகள் மத்தியில் அவை நடத்தப்பட வேண்டும் என்பதா? அல்லது நாம் வாழும் சமுகத்திலே, பாடசாலைகளிலே, வேலை செய்யும் இடங்களிலே, சபை ஐக்கியங்களிலே, கடைத் தெருக்களிலே செய்யப்பட வேண்டும் என்பதா? அல்லது அவரவர் குடும்பத்திலும் உறவுகள் நண்பர்கள் மத்தியிலே தேவ சித்தம் நிறைவேற வேண்டும் என்பதா அல்லது என் வாழ்விலே தேவ சித்தம் நிறைவேற வேண்டும் என்பதா? ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, முதலாவதாக, ஒவ்வொருவரும் தன் தன் வாழ்வில் தேவன் கூறியவற்றை செய்வதற்கு இடங்கொடுக்க வேண்டும். ராஜ்யங்களையும், ராஜாக்களையும், அதிகாரிகளையும், மற்றவர்களை யும் ஒப்புக்கொடுபது மிக இலகுவான காரியம். ஆனால், அவரவர் தன் தன் மாம்ச எண்ணங்களை நிறைவேற்றாமல், பிதாவாகிய தேவனுடைய சித்தம் இந்த பூமியிலே நிறைவேறும்படிக்கு, முதலாவதாக, தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும். கர்த்தர் கற்பித்த ஜெபத்தை கூறுவதோடு நிறுத்திவிடாமல், ராஜக்களுக்கும், ஆளுகின்ற அதிகாரிகளுக்காகவும் ஊக்கமாக ஜெபிக்கின்றவர்களாகவும், சபை ஐக்கியங்களிலே ஒருமனதோடு ஒன்றையே சிந்தித்து, தேவ சித்தம் ஒன்றையே நிறைவேற்றும்படி பிரயாசப்பட வேண்டும்.

**சங்கீதம் 115:3**

**நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்.**

**ஜெபம்:** பரமண்டலங்களிலே இருக்கின்ற பிதாவே, உம்முடைய சித்தமானது பரலோகத்திலே செய்யப்படுவது போல, என் வாழ்வில் செய்யப்படும்படிக்கு, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனால் கூடாதது ஒன்றுமில்லை

சிலவேளைகளிலே சில விசுவாச மார்க்கத்தார், தாங்கள் விரும்பியதும், சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும், இலகுவாக செய்து முடிக்கக்கூடியதும் அல்லது தங்களுக்கு ஆதயம் உண்டாகக்கூடியதுமான காரியங்களை தேவனுடைய சித்தம் என்று அவைகளை செய்து முடிக்கின்றார்கள். தங்களுக்கு கடினமானதும், தங்கள் எண்ணகளுக்கு உட்படாததும், சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படாததுமான அல்லது தங்களுக்கு நஷ்டம் ஏற்படக்கூடிய காரியங்களை நிறைவேற்றுவதற்காக எந்தப் பிரயாசமும்படாமல், அவை தேவ சித்தம் இல்லை என்று கூறிவிடுகின்றார்கள். இப்படிப்பட்ட எண்ணமுடையவர்கள், கருத்தில்லாமல் பரலோகத்திலே உம்முடைய சித்தம் செய்யப்படுவதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று ஜெபம் செய்து கொள்கின்றார்கள். நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாய், இசைந்த ஆத்துமாக்களாய் தேவ சித்தம் ஒன்றையே சிந்தித்து, அதை நிறைவேற்றி முடிக்கும் பொருட்டு, "கிறிஸ்துவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்க வேண்டும். அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைப் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்படிந்தவாராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." பரம பிதாவுடைய சித்தம் செய்வதற்கு, பலமும், பராக்கிரதும் அவசியமானது அல்ல. பெயரும் புகழும் தேவையில்லை. பணமும், பொருளும் வேண்டியதல்ல. மாறாக, மனத்தாழ்மையும், கீழ்படியும் அவசியமானதாகும். தேவ சித்தத்தை நிறைவேற்றும்படி ஒரு விசுவாசியினிடத்தில் இருக்கும் கீழ்படியும் மனத்தாழ்மையும், சபை ஐக்கியங்களிலே, கண் கண்ட அதிகாரங்களோடு அவர்கள் எப்படி நடந்து கொள்கின்றார்கள் என்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஒருவன் தன் சொந்த அபிப்பிரயாங்களுக்கு இடங்கொடாமல், தேவ சமுத்திலே உண்மையாய் தன்னைத் தாழ்த்தி, தேவ வார்த்தைக்கு கீழ்படியும்படி தன்னை ஒப்புக் கொடுக்கும் போது, பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, தேவ சித்தத்தை நிறைவேற்றி முடிக்க, தேவ ஆவியினாவர்தாமே துணைபுரிவார். எனவே உங்களுடைய விரும்பப்படியல்ல, தேவன் விரும்புகின்ற பிரகாரமாக செயற்பட உங்கள் இருதயங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளும்படி, மனத்தாழ்மையோடு, தேவ வார்த்தைக்கு கீழ்படியுங்கள்.

**பிலிப்பியர் 4:13**

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.

**ஜெபம்**: அழியாத நித்திய ராஜ்யத்திற்காக என்னை அழைத்த பிதாவான என் தேவனே, உம்முடைய திருக்குமாரனைப் போல, உம்முடைய சித்தம் நிறைவேறும்படிக்கு ஒப்புக் கொடுக்க என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – யாக்கோபு 4:7 –10

# பூரண அர்ப்பணிப்பு

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக, கபிரியேல் என்னும் தேவ தூதன், இஸ்ரவேலில், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில், தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவ னாலே அனுப்பப்பட்டான். அந்தக் கன்னிகையின் பேர் மரியாள். அவள் இருந்த வீட்டில் தேவ தூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரிகளுக்குள் நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான். அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட் டதோ என்று சிந்தித்துக்கொண்டி ருந்தாள். தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே் நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார் கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றெ ன்றைக்கும் அரசாளுவார் அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என் றான். அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தர மாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும் ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். இதோ, உனக்கு இனத்தாளா யிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்ப ந்தரித்திருக்கிறாள் மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம். தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான். அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தை யின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளி டத்திலிருந்து போய்விட்டான். ஆம் பிரியமானவர்களே, இனிநடக்க போவது இன்னது என்று அறியாதிருந்த மரியாள், எப்படியாக தேவ சித்தம் நிறைவேற, முற்றாக தன்னை ஒப்புக் கொடுத்தாளோ, அது போலவே நாமும் பெரிய காரியமானாலும், சிறிய காரியமானாலும், தேவ சித்தம் செய்ய நம்மை நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும். தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமி ல்லை.

**லூக்கா 1:38**

**அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின் படி எனக்கு ஆகக்கடவது என் றாள்.**

**ஜெபம்:** பரலோகத்திலிருக்கின்ற தேவனாகிய கர்த்தாவே, நான் மரியா ளைப் போல, நிபந்தனையற்ற அர்ப்பணிப்போடு உம்முடைய சித்தத்திற்கு என்னை ஒப்புக் கொடுக்க என்னை உம் கிருபையால் பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரலோக ராஜ்யத்திற்குரியவர்கள்

"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத்தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (யோவான் 3:16) என்று பரிசுத்த வேதாகத்திலே வாசிக்கின்றோம். இது பிதாவாகிய தேவனின் அநாதி தீர்மானம். எந்த ஆத்துமாவும் பாதாளத்திலே அழிந்து போவது தேவனுடைய சித்தமல்ல. வாழ்வு தரும் மெய்யான ஒளியாகிய கிறிஸ்து இயேசு இந்த உலகத்திற்கு வந்திருந்தும், அநேகர் மனம் இருளின் அதிகாரத்திற்குட்பட்டவைகளை வாஞ்சிக்கின்றது. அவர்களுடைய தீர்மானமே அவர்களுடைய ஆக்கினைக்கு காரணமாக இருக்கின்றது. கேட்டுக்கு போகின்ற வழி விசாலமாதாக இருப்பதால், அநேகர் அவ்வழியே பிரவேசிக்கின்றார்கள். அதன் முடிவோ அழிவு. எனவே, பிதாவாகிய தேவனின் சித்தம் செய்யும்படி நாடுங்கள். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளிலே அநேகர் என்னை நோக்கி: கர்த் தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளை துரத்தினோம் அல்லவா என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிரு க்கின்றார். பிரியமானவர்களே, இன்று பெரும் ஊழியம் என்று கருதப்படும், உலகத்தை கலக்கும் காரியங்களை ஒருவன் நடப்பிக்கலாம். தன் ஊழியங்களுக்கென்றுபெரிதானஸ்தாபனங்களைஉருவாக்கலாம், ஆனால், அவன் வாழ்விலே பிதாவாகிய தேவனுடைய சித்தம் இல்லையெ ன்றால் அதனால் அவனுக்கு பரலோகிலே பலன் இல்லை. நீங்கள் உலகத்தை கலக்கும் காரியங்களை செய்ய வேண்டும் என்று தேவன் கேட்கவில்லை ஆனால் தன்னுடைய சித்தத்தை செய்யும்படி உங்களை அழைத்திருக்கின்றார். அதற்கு தேவையான யாவற் றையும் மிகையாய் கொடுத்திருக்கின்றார். எனவே, பரலோகத்தின் ஒரே வழியாகிய ஆண்டவர் இயேசுவை பற்றிக் கொள்ளுங்கள். அவரே வாசல். அவரே ஜீவ அப்பம். அவரே செல்லும் வழிக்கு ஜீவ ஒளியாயிருக்கின்றார்.

**மத்தேயு 7:21**

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய் கிறவனே பரலோகராஜ்யத் தில் பிரவேசிப்பானேயல்லாமல்...

**ஜெபம்**: கிருபையும் இரக்கமும் நிறைந்த சர்வ வல்லமையுள்ள தேவனே, நீர் உண்டாக்கிய புதிதும் ஜீவனுமான மார்க்கத்தின் வழியாய் நான் செல்லும்படிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ சித்தம் நம் வாழ்வில்

இலவசமான கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. இப்படியாக புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணின பிதாவாகிய தேவன்தாமே, தம்முடைய சித்தத்தை மறைபொளாக வைத்து, அதை நீ கண்டு பிடித்து, நிறைவேற்றினால்தான் உனக்கு நித்திய ஜீவன் உண்டு என்று, தம்முடைய சித்தத்தைஎவருக்கும் மறைத்து வைக்கவில்லை. என் சித்தப்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன். அவர் எனக்கு தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்து போகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது. குமாரனை கண்டு, அவரிடத்தில் விசுவாசிமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவதும்,நான்அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும், என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கின்றது என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, ஆண்டவராகிய இயேசு கூறியபடி, நாம் தேவனுக்கேற்ற கிரியைகளை நம் வாழ்வில் செய்ய வேண்டும். அந்த கிரியைகள் என்ன? பிதாவாகிய தேவன் அனுப்பின மீட்பராகிய இயேசுவை விசுவாசிப்தே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கின்றத என்று யோவான் ஆறாம் (6) அதிகாரத்திலே வாசிக்கலாம். அப்படியான நாம் மீட்பர் இயேசுவின்மேல் விவாசம் வைக்கும் போது, அவரே நிலைத்திருக்கின்றோம். நாம் அவரிலே ஒட்டப்பட்ட கிளைகளாக இருக்கின்றோம். நாம் அவரிலும் அவருடைய வார்த்தை நம்மிலும் நிலைத்திருக்கும். அப்போது, அவர் விரும்பும் அதிக கனிகளை நாம் கொடுப்போம். அந்தக் கனிகளே நாம் யாருடைய சித்தம் செய்கின்றோம் என்பதை நமக்கும் மற்றவர்களுக்கும் வெளிப்படுத்தும். நாம் பூமிக்கு உப்பாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும் காணப்படவேண்டும். அந்த சாரம் கிறிஸ்து வழியாக நம்மிடத்திலும், கிறிஸ்துவிலே பிரகாசித்த அந்த மகிமையின் ஒளியானது நமக்குள்ளும் பிரகாசிக்கின்றது. இவையெல்லாம் நம்முடைய மகிமைக்காக அல்ல, நம் கனிகளின் வழியாக பரம பிதா மகிமையடைய வேண்டும். எனவே, தேவ சித்தமானது பரலேகத்திலே செய்யப்படுவது போல, நம் வாழ்க்கையிலும் செய்யப்படும்படிக்கு நம்மை ஒப்புக் கொடுத்து, கருத்தோடு பிதாவாகிய தேவனை நோக்கி அறிக்கையிடுவோமாக.

**யோவான் 15:5**

**ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்**

**ஜெபம்:** பரலோக தேவனே, நான் வார்த்தையாகிய உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவிலே நிலைத்திருந்து, உமக்கேற்ற கனிகளை கொடுக்கும்படி, வார்த்தையிலே நிலைத்திருக்க எனக்கு கிருபை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.